Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 25 ஆம் நாள் ஷவ்வால் 20 (7-4-61) | வெள்ளிக்கிழமை | இதழ் 48

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

Advt. 83

# கொழும்பில் பேச்சுகள்

## தொடர்ந்து நடக்கின்றன

## எஸ். ஜே. வி. யின் வீட்டுக்கு அரசாங்க அதிகாரிகள் வருகை

கொழும்பு, வெள்ளி

**நிதி மந்திரிக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குமிடையில் நேற்று முன் தினமிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்பின் நீதியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. பி. ஏ. சில்வாவும் நீதியமைச்சின் உதவிக் காரியதரிசி ஒருவரும் திரு. செல்வநாயகத்தை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தனர்.**

நாட்டை எதிர் நோக்கியுள்ள பெரிய பிரச்சினையை சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வதற்கான புதிய முயற்சிகள் இன்று அரசாங்கரீதியிலும் மேற்கொள்ளப் பட்டன.

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக் கோரிக்கைகள் சம்பந்தமாகத் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் நீதி மந்திரி சாம். பி. ஸி. பெர்னண்டோவும் நேற்று முன்தினம் இரவு முதல் தடவையாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் திரு. எம். திருச்செல்வத்தின் இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. எஸ். எம். இராசமாணிக்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் அரசாங்கத்தின் சார்பில் நீதி மந்திரி செனட்டர் சாம் பி. ஸி. பெர்னண்டோவும் கலந்து கொண்டனர்.

பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா பதவியேற்றபின் அரசாங்கத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது தமிழரசுக் கட்சியினர் சமர்ப்பித்த குறைந்த பட்சக் கோரிக்கைகள்மீது சில புதிய யோசனைகளை நீதிமந்திரி தெரிவித்ததாகத் தெரிகிறது. தமிழ் மொழி உபயோகம் சம்பந்தமாகச் சில கோரிக்கைகளைத் தமிழரசுக் கட்சியினர் தெரிவித்ததுடன் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தையும் நினைவில் கொள்ளுமாறு கூறினார்கள் என்று அறியப்படுகிறது.

### கோரிக்கை மறுக்கப்பட்டதா?

தமிழரசுக் கட்சியினர் சமர்ப்பித்த கோரிக்கைகள் பற்றி நீதி மந்திரி விவாதிக்கவில்லை. ஆனால் உத்தியோக மொழிச் சட்ட அமுலிலுள்ள சிக்கல் பற்றியே அவர் திரும்பத் திரும்பப் பேசியதாகத் தெரிகிறது.

என்றாலும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுடைய கோரிக்கைகளை பிரதம மந்திரிக்கும் மந்திரிசபைக்கும் தாம் தெரிவிப்பதாகவும் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொள்ள வேண்டாமென்றும் நீதி மந்திரி சாம் பி. ஸி. பெர்னண்டோ தமிழரசுக் கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

### பிரதமரைச் சந்தித்தார்

முதல் நாள் சந்திப்பு முடிவடைந்த பின் வியாழக்கிழமை காலை நீதி மந்திரி சாம் பி. ஸி. பெர்னண்டோ பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரம் தொண்டர்கள் நேற்றிரவு மறியல்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்றிரவு யாழ்ப்பாணக் கச்சேரிமுன் மூவாயிரத்துக்கு மதிகமான தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர். இதன் காரணமாக சத்தியாக்கிரகம் ஆரம்பமான தினங்களில் தென்பட்ட விறுவிறுப்பான சூழ்நிலை நேற்று நிலவியது.

நேற்றைய மறியலில் கலந்து கொண்ட தொண்டர்களில் சரிபாதி பெண்களாவர்.

கோப்பாய்க் கலை வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 100 தொண்டர்கள் நேற்றிரவு ஊர்வலமாக வந்து கலந்து கொண்டனர்.

இன்று, நேற்றிரவிலும் பார்க்க அதிகமான தொண்டர்கள் கலந்து கொள்ளக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 47-ம் நாள்

கோப்பாய்த்தொகுதி தொண்டர்களால் கோப்பாய்

(6-ம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர்களாம்

### சி. பி. டி' சில்வா அறிக்கை

கொழும்பு, ஏப் 6

இன்று பிரதிநிதிகள் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது நடந்த விவாதத்தில் சபைத் தலைவர் திரு. சி. பி. டி' சில்வா பேசுகையில், தமிழரசுக்கட்சித் தலைவர்கள் நீதி மந்திரியுடன், பேச்சு வார்த்தைகள் நடத்த விரும்பினர்களென்று கூறினர்.

பிரதம மந்திரியுடனும், வேறு எந்த மந்திரியுடனும் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று திரு. சில்வா கூறினர்.

வடக்கு, கிழக்கு மாகாண நிலைமை குறித்து நாளையன்று விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதாக அவர் தெரிவித்தார்.

## மந்திரிசபை ஆலோசனை

கொழும்பு, வியாழன்

மந்திரிசபை இன்று கூடி நீதி மந்திரி சாம். பி. சி. பெர்னண்டோவும் தமிழரசுக்கட்சித் தலைவர்களும் நடத்திய பேச்சுவார்த்தைகள்பற்றி ஆராய்ந்ததாகத் தெரிகிறது. இன்று நீதிமந்திரிக்கும் செல்வநாயகத்துக்குமிடையில் பேச்சுவார்த்தைகளெதுவும் நடக்கவில்லை. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சனிக்கிழமை யழ்ப்பாணம் திரும்புவார்.

## இந்திய வம்சாவளியினரின் பங்கீட்டரிசிப் புத்தக மனு

### 'லோக் சபை'யில் விளக்கம்

புதுடில்லி, ஏப்ரல் 5

"இலங்கையிலுள்ள இந்திய வம்சா வளியினர் பங்கீட்டரிசிப் புத்தகங்களுக்காக செய்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருவதற்கு விசேஷ உள்ளர்த்தம் கற்பிக்க வேண்டியதில்லை" எனறு இந்திய விவகார மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. ஸாதத் அலிகான் இன்று லோக சபையில் கூறினர்.

"இந்திய வம்சா வளியினருக்கு பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வழங்குவதில்லை" என்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக கூறப்படுவது பற்றி விவாதிப்பதற்காக திரு. பிரேம் ஜி. ஆர். அஸ்ஸார் ஒரு பிரேரணை கொண்டு வந்தார்.

இதற்குப் பதிலளித்து திரு. ஸாதத் அலிகான் பதிலளிக்கையில், பின்வருமாறு கூறினர்:-

பத்திரிகைகளில் வெளியான சில செய்திகள் தவறான அபிப்பிராயத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. நமக்குக் கிடைத்துள்ள தகவலில், "பங்கீட்டரிசிப் புத்தகங்கள் கோரி இலங்கையரிடமிருந்து 60,000 மனுக்களும், இலங்கையரல்லாத பெரும்பாலும் இந்தியர்களிடமிருந்து 5000 மனுக்களும் இலங்கை சர்க்காருக்கு வந்துள்ளன. இந்த நபர்கள் முதல் தடவையாக பங்கீட்டரிசிப் புத்தகங்களுக்கு மனுச் செய்பவர்கள். கள்ளத்தனமாக குடியேறியவர்களோ விசா

(6-ம் பக்கம் பார்க்க)

## வவனியா இயக்கத்துக்கு தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியாவில் மறியல் இயக்கத்துக்குப பூரணஒத்துழைப்பு அளிக்குமாறு வவுனியாவிலுள்ள தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களுக்கும் தொண்டர்களுக்கும் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

சில தினங்களுக்கு முன் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் யாழ்ப்பாணத்துக்கு வந்து தலைவர் செல்வநாயகத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத்தொடர்ந்தே இச்செய்தி அனுப்பிவைக்கப் பட்டதாகத் தெரிகிறது.

வவனியாவில் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு திரு. செல்வநாயகம் முதலில் விரும்பவில்லையென்றாலும் ஆரம்பிக்கப்பட்டபின் அது சோர்வடையக்கூடாது என்று அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.

திரு. செல்வநாயகத்தை திரு. சிவசிதம்பரம் சந்தித்துப் பேசியபொழுது வவனியாவைச் சேர்ந்த திரு. கே. எஸ். கதிரேசு, பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

வவனியாவில் சத்தியாக்கிரக இயக்கத்தை விஸ்தரிப்பது பற்றியும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டதாகவும் தொடர்ந்து எடு

(6-ம் பக்கம் பார்க்க)

## வவனியாவில் பூரண ஹர்த்தால்

### வர்த்தகர்களும் மறியல் செய்தனர்

வவனியா, வியாழன்

இன்று வவனியாவில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வவனியாப் பட்டினத்திலுள்ள வெற்றிலைக்கடை முதல் சாப்பாட்டுக் கடைகள் வரை வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும்மூடப்பட்டிருந்தன. மோட்டார் வாகனங்களிலும் வீதிகளிலும் கட்டிடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன. வவனியாவிலுள்ள சிங்கள வர்த்தகர்களும் தங்கள் கடைகளை அடைத்து தமிழுரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

வவனியாப் பட்டின வர்த்தகர்களும் வர்த்தக ஊழியர்க

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஒவ்வொரு உள்ளத்திலும் ஈச்வரன் உளன். அவனைக்காண வேண்டுமானால், உள்ளத்தைச் சோதித்து, அந்தராத்மாவைக் காண வேண்டும். புலன்களை முற்றிலும் வசப்படுத்தினாலன்றி அந்தக் காட்சியை அடைய முடியாது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 25 வ. (7-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## தமிழ்க் குடும்பத்தில் ஒரு மாசு

ஈழத்திரு நாட்டிலே தமிழ்ப் பேசும் மக்களெல்லாம் இதுவரை என்றுமில்லாதபடி தங்களது தமிழன்னையைக்காக்க ஒற்றுமையுடன் ஒன்று கூடியிருப்பதைப் பார்க்கிறோம். இஸ்லாமியத் தமிழர், கிறிஸ்தவத் தமிழர், சைவத் தமிழர் அனைவரும் சமய வேற்றுமைகளை எல்லாம் மறந்து தமிழுரிமைப் போராட்டத்தில் முழுமனதுடன் ஈடுபட்டுள்ளது, சமயத்தால் பிரிந்த குடும்பம் மீண்டும் ஒன்று கூடியது போல் தோன்றுகிறது. ஹரிஜனங்களும், தங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள தீண்டாமை எனும் பெரும் பாவத்தையும் பொருட்படுத்தாமல், ஏராளமாக இந்த இயக்கத்தில் சேர்ந்து ஒத்துழைக்கின்றார்கள்.

ஆனால் இந்தத் தமிழ்க் குடும்பத்தின் ஒற்றுமை உணமையில் பலப்பட வேண்டுமானால், அதில் புகுந்துள்ள தீண்டாமை எனும் தீமையை அறவே ஒழிக்க முற்படவேண்டும். அந்தப் பணிக்கு இதுவே மிக மேலான சந்தர்ப்பமாகும். இத்தீமை நீங்க வேண்டுமென்பதில் பொதுவாகக் கருத்து வேற்றுமையில்லை. இதை நீக்க படிப்படியாக பற்பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. ஐந்தாண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணத்தில்மூன்றுபெரிய கோயில்கள் ஹரிஜனங்களுக்காகத் திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அத்துடன் இது துரதிருஷ்டவசமாக நின்றுவிட்டது. மற்றக் கோயில்கள் இன்னும் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்படவில்லை. அவர்களுக்கு வேறு பல சமூகக் குறைகளும் இருக்கின்றன. இவற்றைத் தீர்த்து, தமிழ்க் குடும்பத்திலுள்ள பெரியதோர் இப்பாவத்தை நீக்க முற்படவேண்டியது, இக்குடும்பத்தின் ஒற்றுமையிலும் நன்மையிலும் கவலைகொண்ட அனைவரின் முக்கிய கடமையாகும்.

தமிழ்மொழி உரிமைப் போராட்டத்தின் பயனாக, பலர் உள்ளம் இவ்விஷயமாக மாறி வருவதற்கான பல நல்ல அறிகுறிகளைக் காண்கின்றோம். உரிமைப் போராட்டம் நல்லபடியாக முடிந்தபின், இதைப் பற்றிக் கவனிக்கலாமென்று சிலர் கருதக் கூடும். ஆனால் மகாத்மா காந்தி, பாரதநாட்டின் விடுதலைப் போர் நடக்கையிலேயே, தீண்டாமைத் தீமையை ஒழிப்பதை, தமது நான்கு ஆக்கவேலைகளில் ஒன்ருக மதித்து அதற்காகப் பெரும் பாடுபட்டார். தீண்டாமை ஒழிப்புத் திட்டம் சுதந்திரப் போருக்கு அதிக ஆக்கமளித்தது. அதுபோலவே, இச்சமயத்தில், தமிழ்ப் பொது மக்கள், நீண்டகாலமாகப் புரையேறிப்போன தீண்டாமை எனும் தீமையை ஒழிக்க இச்சமயம் தீவிரமாக முற்படுவதின்மூலம், இறை அருளைப் பெற்று தமிழ்க் குடும்பத்தின் மாசைப் போக்கி, அதைப் பலப்படுத்தவும் உரிமைப் போரில்வெற்றி பெறவும் உதவியவர்களாவர்.

# பொறுப்பான சுயாட்சியிலும்

## சத்தியாக்கிரகம் அவசியமிருக்கும்

**சத்தியாக்கிரகம் பற்றி இந்தியாவில் ஹண்டர் என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபைமுன், மகாத்மா காந்தி அளித்த சாட்சியத்தின் ஒருபகுதியை ஏற்கெனவே இங்கு வெளியிட்டோம். அக்கமிட்டியில் பண்டித் ஜகத்நாராயணன் செய்த குறுக்கு விசாரணையின் போது மகாத்மா கூறியபதில் வருமாறு.**

கே:- சத்தியாக்கிரக இயக்கம் அரசாங்கத்திற்குத்துன்பம் விளைவிக்கும் என்று நீங்கள் அஞ்சவில்லையா?

ப:- சாதாரணமாக அரசியல் ஆர்ப்பாட்டம் இந்த நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்படுகிறது என்ருலும், சத்தியாக்கிரக இயக்கம் அரசாங்கத்திற்குத் தொந்தர வளிப்பதற்காக ஆரம்பிக்கப்படவில்லை. தனது செயல்கள் அரசாங்கத்திற்குத் தொந்தரவளிப்பதாக ஒரு சத்தியாக்கிரகிகண்டால், அந்நிலையைத் தவிர்க்க அவன் தயங்கமாட்டான்.

கே:- நீங்கள் உங்களுடைய இயக்கத்தில், முடிந்த அளவு அதிகமானவர்களைச் சேர்க்கவேவிரும்புவீர்கள், அல்லவா?

ப:- அவ்வாறு திட்டமாகச் சொல்ல முடியாது. ஒரு சத்தியாக்கிரகி சத்தியத்தையும் சத்தியத்தைக் கடைப்பிடிக்கத் தனக்குள்ளே சக்தியையுமே நம்பியிருக்கிறுன்.

கே:- ஆனல், மகாத்மாஜி, அரசியலில் தனிப்பட்ட மனிதன் குரல் எவ்வாறு கேட்கும்?

ப:- இது உண்மையல்லவென்பதை நிரூபிக்கத்தான் நான் முயன்று வருகிறேன்.

கே:- தனித்தனியாக ஆங்காங்கு எடுக்கப்படும் முயற்சிகளில் ஒரு ஆங்கில அதிகாரி கவனம் செலுத்துவார் என நம்புகிறீர்களா?

ப:- ஏன்? அதுதான் எனது அனுபவம். கேசவசந்திரசென் விஷயத்தில் பெண்டிங் பிரபு ஒரு சாத்ராண மனிதராகி விட்டார்.

கே.- ஓ, நீங்கள் ஒரு அசாதாரணமான மனிதரின் உதாரணத்தைக் கூறுகிறீர்கள்.

ப:- சாதாரணத் திறமையுள்ளவர்கள் கூட, தார்மிகப் பண்பை வளர்க்கலாம். எனது நாட்டு மக்களிடையே எழுத்தறிவின்மை இருப்பது வருந்தத் தக்கது என்றும், அவர்களுக்குக் கல்வியறிவு புகட்ட வேண்டியது அவசியமென்றும் நான் கருதுகிறேன். ஆனல் கொஞ்சங்கூட எழுத்தறிவில்லாத மனிதன்கூட, சத்தியாக்கிரகக் கொள்கையை கடைப்பிடிப்பது முடியாதகாரியமல்ல. எனது நீண்டகால அனுபவம் இது.

இச்சந்தர்ப்பத்தில் ஹர்த்தாலுக்கும் சத்தியாக்கிரகத்திற்குமுள்ள நுணுக்கமான வேறுபாட்டைக் காந்திஜி விளக்கினர். "ஹர்த்தால் என்பது சத்தியாக்கிரகத்தின் இன்றியமையாப் பகுதியல்ல. அவசியமான போதுதான் அதை நடத்தவேண்டும். ஹார்னிமன் நாடுகடத்தப்பட்ட போதும் கிலாபத் இயக்கத்தின் போதும் நான் அதை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறேன்" என்று காந்திஜி கூறினர்.

கே:- பொறுப்பற்ற வெளிநாட்டு அதிகாரிகளை எதிர்க்க வேறு வழியைக் கையாள முடியாததால்தான் நீங்கள் இந்த இயக்கத்தை ஆரம்பித்துள்ளீர்கள். இல்லையா?

ப:- நான் இதை நிச்சயமாகக் கூறமுடியாது. எதிர்காலத்தில் அமையவிருக்கும் பொறுப்பான சுயாட்சி அரசாங்கத்தில் கூட மக்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கச் சத்தியாக்கிரகம் அவசியமாகவிருக்கும் என்றே நான் கருதுகிறேன். தங்களுடைய அறியாமையால் எதையும் செய்து விட்டதாக இப்போதுள்ள ஆங்கில அதிகாரிகள் கூறலாம். ஆனல் எங்களுடைய அமைச்சர்கள், தங்களுக்குத் தெரியாது என்ற காரணத்தைக் கூறித் தப்ப முடியாது.

கே:- ஆனல் சுயாட்சியில் மக்களுக்குள்ள உரிமைகளின் படி, அமைச்சர்களைப் பதவியிலிருந்து அவர்கள் விலக்க முடியுமல்லவா?

ப:- எப்போதுமே இது நடந்துவிடும் என்று நிச்சயமாகக் கூற முடியாது. பிரிட்டனில் மக்களின் நம்பிக்கையை முற்றிலும் இழந்த பிற்பாடு கூட அமைச்சர்கள் பதவியில் நீடிப்பது அடிக்கடி நடைபெறுகிறது. அது இங்கும் நடைபெறலாம். ஆகையால் சுயாட்சி பெற்ற பின்பு கூட சத்தியாக்கிரகம் அவசியமாகும் நிலைமை இருக்கலாம் என்றே நான் கருதுகிறேன்.

கே:- சத்தியாக்கிரக இயக்கத்தின் பின் அமைதியின்மை இருக்கக் கூடாது என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

ப:- நான் அவ்வாறு எண்ணவில்லை. அதுமட்டுமல்ல. அனசூயா பஹனும் நானும் கைதானபின், கிளர்ச்சி எதுவும் நடைபெறுவிட்டால் நான் ஏமாந்தவனுவேன். ஆனல் இக்கிளர்ச்சி பலாத்கார ரூபத்தில் இருக்காது. மற்றவர்கள் துன்பமடைவதைப் பார்த்து ஒரு சத்தியாக்கிரகி சகிக்கமாட்டான். சத்தியாக்கிரகிகள் ஒவ்வொருவராகத் தொடர்ந்து ஜெயிலுக்கு வருவார்கள். இப்படிப்பட்ட அமைதியின்மையையே நான் விரும்புகிறேன்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணம் சமாதான நீதிபதியும், சமூக சேவை ஆலோசனைக் குழு உறுப்பினருமான நா. இராமலிங்கம் அவர்கள் எழுதுவதாவது:-

"சென்ற 5-ம் திகதி பறைகளைக் கொளுத்திய சம்பவம் பற்றி எழுதியிருந்தது குறித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. பறையடித்தல் ஒரு தொழில் என்று கூற முடியாது. அது உளுத்துப்போன தமிழர் சமுதாயத்தில் பாரம்பரியமாகச் செய்யப்பட்டுவந்த அடிமை, குடிமை வழக்கமாகும்.

2. அந்த வழக்கப்படி பறையடிப்பவர்கள், மனித உரிமை அற்றவர்களாக, அடக்குமுறைக்கு அடிபணிந்து நடக்க வேண்டியவர்களாகவும் "ஆமா சாமி" போட வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்.

எனவே இவ்வகையான அடிமைப் படுத்தும் ஈனத் தொழிலைச் செய்வதிலும் பார்க்க செய்யாதிருத்தல் சிறந்ததாகும். இதனல் தீண்டாமை ஒழிந்து விடாதென்பது உண்மை. இச்செயலுக்கும் தீண்டாமைக்கும் சம்பந்தமிருப்பதாக யாரும் கூறவில்லை.

இவ்வகையான வழக்கத்தால் மற்றவர்களுக்கு அடிமைப்படும் செயல் வகைகள் யாவும் மறைய வேண்டும். தமிழர் சமுதாயத்தில் சகலரும் சரிநிகர் சமானமுடையராக வாழ வேண்டும். தொழில் காரணமாகவே கொடிய சாதிகள் ஏற்பட்டன. ஆகவே தயவு செய்து மீண்டும் ஒரு முறை புனராலோசனை செய்து சுபீட்சமான சமுதாய அமைப்பில் உங்கள் பங்கைச் செய்வீர்கள் என்று நம்புகிறேன். பாரதி பாடலில் "பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை" என்ற அடி முன் வைக்கப்பட்ட காரணத்தையும் ஆராய்வீர்களாக!

* * *

எனக்கு எப்போதுமே ஒரு சந்தேகம். நான் எழுதுவதை யாராவது படிப்பதுண்டா? என்பதே அது. நான் ஏதோ கிறுக்கியதையும் கூடப்படித்து கடிதமும் எழுதியதற்காக அந்த நண்பருக்கு முதலில் நன்றி.

சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக சென்னையிலே திவான்பகதூர் சீனிவாசன் என்பவர், "பறையன்" என்று ஒரு பத்திரிகையை நடத்தி வந்தார். தாம் "பறையர்" என்ற சமூகத்தைச் சேர்ந்தவரென்றும், பறையடிக்கும் தொழில் இராணுவத்துக்கும், கோவில் விழாக்களுக்கும் மிக முக்கியமானதென்றும், ஆகவே அத்தொழில் காரணமாக வந்த தமது சமூகப் பெயர் பற்றித் தாம் வெட்கப்படவில்லை என்றும், துணிச்சலுடன் கூறியதுடன், அது சமூகத்துக்குக் கண்யமான ஒரு சேவையே என்றும் கூறி, சில வருட காலம் அதே பெயருடன் அப்பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

* * *

ஒரு கோவில் குருக்கள். அவருக்கு நான்கு புதல்வர்கள். தமது பிள்ளைகள் யாருக்கும் தமது குலத் தொழில் செய்ய வேண்டாமென்றும், தம்முடன் இது முடியட்டுமென்றும், தன் பிள்ளைகள் ஆங்கிலம் படித்துப் பெரிய உத்தியோகத்துக்கு வருவதையே தாம் விரும்புவதாகவும் சொன்னர்.

எந்தத் தொழிலானுலும் சரி, பிறருக்குத் தீங்கு செய்யாமல், சமூகத்துக்கு உதவி செய்வதாயிருந்தால், அத்தொழில்களெல்லாம் சரிநிகர் சமமானவையே. முக்கியமானவையே. தொழிலில் யாராவது உயர்வு தாழ்வு கற்பிப்பதாயின், அவரது மனதில் ஏதோ கோளாறு இருக்க வேண்டுமென்றே நான் கொள்வேன்.

சாதிக் கொடுமையும் தீண்டாமைத் தீமையும் சமூகத்தில் புகுந்து எவ்வளவு கேடு செய்துவிட்டதென்பதை நாமெல்லாம் அறிவோம். இக்கொடுமைகள் காரணமாகத்தான் இன்று நமது சமூகம் உரிமை இழந்தும் பரிதவிக்கின்றது. பொதுமக்கள் இதை உணர்ந்து தங்கள் மனதை மெதுவாக மாற்றிக் கொண்டு வருகிருர்கள்.

* * *

புங்குடுதீவிலே இன்று தமிழ்மொழி உரிமைக்காகக் கோடி அர்ச்சனை ஹோமம் செய்யும் குருக்கள் ஒருவர் வந்தார். அந்தப் பணியைப் பாராட்டிவிட்டு, தீண்டாமையும் சாதிக் கொடுமையும் தமிழ் சமூகத்தைப் பிளவுபடுத்தி வருகிறதே, இவை நீங்க நீங்கள் ஏதும் செய்யக் கூடாதா? என்று கேட்டேன்.

அடுத்தபடியாகத் தாங்கள் அவ்விஷயத்தில் கவனம் திருப்பி ஈடுபடுவதாக உறுதி சொன்னர்.

* * *

கால்பேஸ் திடலில் அன்று சத்தியாக்கிரகிகளுக்கு அடி விழுந்ததுடன் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியது. அதற்குப் பின் ஒரு சில நாட்களுக்குள்ளாக, நல்லூர் முருகன் கோவில், வண்ணை சிவன் கோவில், பெருமாள் கோவில் இவை திறக்கப்பட்டன.

அதே போல இன்று சத்தியாக்கிரகம் காரணமாக மக்களிடையே சாதி உயர்வு தாழ்வு எண்ணங்கள் பெரிதும் மறைந்து வருவதைப் பார்க்கின்ருேம். ஆண்களாவது மனம் மாறிவிடலாம். தாய்மார்கள் மனம் எப்படி மாறுமோ என்று நினைத்திருந்தேன். ஆனல் கச்சேரியடியில் இராப்பகலாகச் சத்தியாக்கிரகம் செய்யும் வீரத் தாய்மார்கள், சாதி வேற்றுமை எண்ணங்களைப் பெரிதும் விட்டுவிட்டதாக அறிந்தேன். சத்தியாக்கிரகம் முடிந்ததும் அந்த வீராங்கனைகள் இனிச் சும்மா இருப்பார்களா? சாதிக் கொடுமையையும் தீண்டாமையையும் ஒழித்து, தமிழ் சமூகத்தை ஒன்றுபடுத்தி, முன்னேற்றும் நல்ல பணிகளில், விழித்தெழுந்துவிட்ட நம் தாய்மார்கள், பூரணமாக ஈடுபடுவார்களென்பதே என் நம்பிக்கை.

## சிப்பாய்களுக்குப் புதிய வேலை!

யாழ்ப்பாணம், வியாழன் அரசாங்க தகவல் பகுதியின் விநியோகப் பொறுப்பு வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை இராணுவமே கையேற்றிருப்பதாகத் தோன்றுகிறது.

தமிழுரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து அரசாங்கம் வெளியிடும் துண்டுப்பிரசுரங்களையெல்லாம் இவர்களே விநியோகித்து வருகிருர்கள்.

சிலதினங்களுக்கு முன் திரு. என். ஈ. வீரசூரியா கியூ.சி. ஆங்கிலவாரப்பத்திரிகைஒன்றில் எழுதிய 'மொழிச்சட்டத்தின் கீழ் தமிழர் உரிமைகள்' என்னும்கட்டுரையின் தமிழாக்கம் தகவல் பகுதியால் துண்டுப்பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. இத்துண்டுப் பிரசுரங்களை கட்டுக்கட்டாகப் பரப்பி வருவதில் இராணுவத்தினர் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். இவைகள் எடுப்பாரற்று வீதிகளில் குப்பையாகக் குவிந்து கிடக்கின்றன. பஸ் நிலையம் சந்தை ஆகிய இடங்களில் நின்று இவர்கள் துண்டுப்பிரசுரங்களைவிநியோகிக்கின்றனர்

---

## அரசியல் ஆர்ப்பாட்டங்கள்

### மாணவர்கள் ஈடுபடலாமா?

புதுடில்லி, ஏப்ரல் 5

இளம் வயதுள்ள மாணவர்களை அரசியல் ஆர்ப்பாட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கது தானு என்பது பற்றி இன்று லோகசபையின் கேள்விநேரத்தில் கால்மணிநேரத்திற்கதிகமாகவே விவாதம் நடந்தது.

இந்த விஷயத்தில் அரசாங்கம் எதுவும் தடைகள் வதிக்க விரும்பவில்லையென்றும் ஆனல் மாணவர்கள் இம்மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அரசியல்கட்சிகள் ஊக்கமளிக்காமல் இருந்தால் நல்லதென்றும், இது மாணவர்களுக்கு மட்டுமன்றி தேச நலன்களுக்குக்கூட நல்லதாக இருக்குமென்றும் கல்வி மந்திரி டாக்டர் மாலி கூறினர்.

ஒரு கம்யூனிஸ்ட் அங்கத்தவரையும், ஒரு பிரஜா சோஷலிஸ்ட் அங்கத்தவரையும் தவிர மற்ற எல்லாக் கட்சியினரும் மாணவர்கள் அரசியல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாமலிருப்பது நல்லது என்பதை ஒப்புக் கொண்டார்கள்.

காங்கோ

# 3 வாரத்தில் அந்நிய துருப்புகளை

## வெளியேற்ற 15 நாடுகள் தீர்மானம்

### ஐ. நா. வுடன் ஒத்துழைக்க பெல்ஜியம் இணக்கம்

நியூயோர்க், ஏப்ரல் 5

**காங்கோவில் ஐ. நா. கீழில்லாத அந்நியத் துருப்புக்கள் 3 வாரங்களுக்குள் வெளியேறிவிட வேண்டுமென இந்தியா, யூகோஸ்லேவியா, இலங்கை உட்பட 15 ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஐ. நா. மகாசபையில் ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளன. அதேசமயம் ஐ. நா. வுடன் ஒத்துழைப்பதாக பெல்ஜிம் பொதுக்காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டுக்கு தெரிவித்தது.**

காங்கோவிலிருந்து பெல்ஜியம் துருப்புக்களும், அரசியல் ஆலோசகர்களும், ஐ. நா. வின் கீழில்லாமல் சம்பளத்திற்காக ராணுவ சேவைபுரிபவர்களும் 21 நாட்களில் வெளியேறிவிட வேண்டுமென்றும், பெல்ஜியம் இதற்கு மறுத்தால் ஐ. நா. சாஸனத்தின் அடிப்படையில் அந்த நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் 15 நாடுகளின் தீர்மானம் கூறுகிறது.

ஆனல், ஐ. நா. வுடன் இவ் விஷயத்தில் ஒத்துழைப்பதாக பெல்ஜியம் இணக்கம் தெரிவித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. பெல்ஜியம் வெளியேற வேண்டுமென பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்தே வெளியேற்றத்துக்கான ஏற்பாடுகளை தாங்கள் செய்துவருவதாயும் பெல்ஜிய அரசாங்கம் திரு. ஹமர்ஷீல்டுக்குத் தெரிவித்துள்ளதாம்.

இதே சமயம் கடாங்காவிலுள்ள காமினேவுக்கு மேலும் இந்தியப் போர்த்துருப்புகள் அனுப்பப் பட்டிருக்கின்றன. இப்போது காங்கோவிலுள்ள ஐ. நா. துருப்புக்களின் எண்ணிக்கை முன்பிருந்த அளவை எட்டிவிட்டதாக திரு. ஹமர்ஷீல்ட் அறிவித்துள்ளார்.

பிரதம மந்திரி நேரு, இன்று தண்டியில் காந்திஜி நினைவுச் சின்னம் ஒன்றைத் திறந்து வைத்தார்,

## இந்தியச் செய்திகள்!

இந்தியாவிலிருந்து 2 கோடி ரூபாய் பெறுமதியான 20 வித மான பண்டங்களை இறக்குமதி செய்ய பிரான்ஸ் தீர்மானித்துள்ளது.

பஸ்காரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணைக்கமிஷன் நியமிப்பது அவசியமில்லையென முதன் மந்திரி திரு. கட்ஜு கூறினர்.

இந்தியாவின் பிளாஸ்டிக் பொருட்கள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாயும், ஹாங்காங்கும், ஜப்பானும் இத்துறையில் இந்தியாவுக்குப் போட்டியாக இருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

மத்திய துப்பறியும் இலாகா அதிகாரியான லெப்டினண்ட் கர்னல் பட்டாச்சார்யாவை பாகிஸ்தான் எல்லைப் பொலிசார் தூக்கிச்சென்றதை இந்தியா ஆட்சேபித்திருப்பதாய் லோகசபையில் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவுக்கு சர்க்கரை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாய் பேச்சுவார்த்தைநடத்தும் பொருட்டு தாம் வாஷிங்டன் செல்லப்போவதாய் உணவு மந்திரி திரு. பட்டீல் கூறினர்.

## மாக் - கென்னடி சீனுபற்றி பேசினர்

வாஷிங்டன், ஏப். 5

அமெரிக்க ஜனதிபதி கென்னடியும், பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனும் நேற்று நேட்டோ ஐ. நா. வில் சீனவை அனுமதித்தல், சர்வதேச பொருளாதார நிதி ஆகியன பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியதாய் அறிவிக்கப்படுகிறது.

## அட்டோர்னி ஜெனரல் தீர்ப்பு

கொழும்பு, வியாழன்

1-ம், 2-ம் தர பாடசாலைகளுடனிருக்கும் ஆரம்பப் பாடசாலைகளை கல்வி டைரக்டர் நிர்வாகத்தில் வைத்திருக்க முடியாதென அட்டோர்னி ஜெனரல் தீர்ப்பளித்திருக்கிறார்.

இந்தப்பிரச்சினை சம்பந்தமாக கத்தோலிக்க பாடசாலைகளின் ஜெனரல் மனேஜர் வண. பிதா திஸ்ஸநாயகா அட்டோர்னி ஜெனரலின் தீர்ப்பைக் கோரியிருந்தார்.

## ஓய்வுபெறும் பெண்கள்

### கல்லூரி அதிபருக்கு பிரியாவிடை

மட்டக்களப்பு, வியாழன்

'மதஸ்தாபனப் பாடசாலைகளில் நீண்டகாலம் விஸ்வாசமாக சேவைபுரிந்த ஆசிரியர்களே பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கான காரணம்" என வின்சன்ட் பெண்கள் கல்லூரி அதிபராயிருந்து ஓய்வுபெறும் செல்வி ஏ. பத்மனுக்களிக்கப்பட்ட பிரியாவிடையின் போது மட்டக்களப்பு கல்வி அதிகாரி திரு. ஏ. ராஜகாரியர் கூறினர்.

செல்வி பத்மன், 28 வருட ஆசிரியசேவைக்குப்பின் ஓய்வுபெற்று இந்தியா திரும்புகிருர்.

மட்டக்களப்பு நீதவான் திரு. எஸ். தம்பித்துரை பேசுகையில் செல்வி பத்மனைப் புகழ்ந்துரைத்தார்.

## திருமலைத் துறைமுக வேலை ஸ்தம்பிதம்

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலைத் துறைமுகத்தில் நேற்று வேலைகள் ஸ்தம்பித்தன. புதுவருட சம்பள முற்பணம் கொடுக்க கப்பல் கம்பனி ஏஜன்டுகள் மறுத்ததாகவும் இதை ஆட்சேபித்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

நேற்று முற்பகலில் கைத்துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும் இதில் ஒரு தொழிலாளி காயமடைந்ததாகவும் இதைத் தொடர்ந்து ஆயுதந் தாங்கிய பொலிசார் அங்கு காவலுக்கு அனுப்பட்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கப்பல் கம்பனி ஒன்றைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தர் தாக்கப்பட்டதாகவும் ஆஸ்பத்திரிக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிகிறது.

துறைமுகத்திலும் அதைச் சூழ்ந்த இடங்களிலும் பொலிசார் காவல் புரிகின்றனர்.

## எம். பி.க்கு லீவு இல்லை

கொழும்பு, வியாழன்

திருமலை எம். பி. திரு. என். ஆர். ராஜவரோதயத்திற்கு 3 மாத லீவு வழங்க வேண்டுமென்று நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் காலி எம். பி. திரு. தகநாயக்கா கொண்டு வந்த பிரேரணையை, சபையில் ஆமோதிக்க எவரும் முன்வராததால் அது வெற்றியளிக்கவில்லை.

## பிரிட்டனின் மனமாற்றம்

### தென் ஆபிரிக்க இன ஒதுக்கலை எதிர்த்து வாக்களிக்கும்!

நியூயோர்க், ஏப்ரல் 5

தென்னபிரிக்கா, தன் இன ஒதுக்கல் கொள்கையை விடாவிட்டால் அதன்மீது அங்கத்துவ நாடுகள் தனியாகவும், கூட்டாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியா, இலங்கை முதலியநாடுகள் கொண்டுவந்துள்ள பிரேரணைக்குச் சாதகமாய் வாக்களிக்கப் போவதாய் பிரிட்டன் அறிவித்துள்ளது. இதுவரை ஐ. நா. வில் தென்னபிரிக்காவுக் கெதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ பிரிட்டன் வாக்களிக்கவில்லை. வாக்களிக்காமல் ஒதுங்கியே இருந்த பிரிட்டன் இப்போது முதல் முறையாக இத் தீர்மானத்திற்குச் சாதகமாய் வாக்களிக்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கைத்தொழில் அபிவிருத்திப் பகுதி

கொழும்பு, வியாழன்

உள்நாட்டுக் கைத்தொழில் பற்றி ஆராய கைத்தொழில் அபிவிருத்திப் பகுதி ஒன்றை கைத்தொழில் அமைச்சர் நிறுவியிருக்கிருர்.

பிரஸ்தாப பகுதி, ஒவ்வொரு வர்த்தகரின் கைத்தொழில் திட்டத்தையும் ஆராய்ந்தபின் உதவிப் பணம் அல்லது வரி விலக்கு நிவாரணம் அளிப்பது பற்றி முடிவு செய்யும்.

## உலகெங்கும் தாகூர் நூற்றுண்டுவிழா

லண்டன், ஏப்ரல் 5

மகாகவிரவீந்திரநாத்தாகூரின் நூற்றுண்டுவிழா உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

ரவீந்திரரின் வாழ்க்கை வரலாறு, அவரது இலக்கியங்கள், கையெழுத்துப்பிரதிகள் ஆகியனபற்றி ரஷ்யா ஒரு திரைப் படத்தைத்தயாரித்திருக்கிறது.

ஹாலந்தில் தாகூரின் நூற்றுண்டு விழாவைக்கொண்டாட சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தாகூர் கொண்டாட்ட கமிட்டியில் ஹாலந்து அரசியும், ஹாலந்து பிரதமரும் அங்கம் வகிக்கின்றனர்.

ஏப்ரல் 8-ந்தேதி நியூயோர்க்கில் நடைபெறும் விழாவில் கல்கத்தா ஆசிரியரும், எழுத்தாளருமான புத்ததேவ போஸின் சொற்பொழிவு ஒன்றும், கவிஞர் தாகூர் எழுதிய கதையை அடிப்படையாகக் கொண்ட "காபூலிவாலா" என்ற திரைப் படமும் நடைபெறும். நியூயோர்க் நகரத் தாகூர் சங்கம் இந்நிகழ்ச்சியை நடத்துகிறது


இலங்கையில் புகழ்பெற்ற

**R. P. S. கோப்பித்தூளையே**

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

குணத்திலும் மணத்திலும் சிறந்தது

**R. P. S. கோப்பித்தூள்.**

எங்களிடம்

- கடுகு
- மிளகு
- கொச்சிக்காய்
- பலசரக்குச் சாமான்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

**ரஹ்மான் புரடியூஸ் ஸ்டோர்ஸ்**

22, 26, பழையசோனகத் தெரு,

கொழும்பு-12.

Advt. 86 டெலிபோன்: 6146



தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

**33**
**303** ஊதுபத்திகளை
**3003**

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,

பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:

**ஜெகஜோதி அன் கோ.**

குருநெகல.

Adv 85



தந்தி: மன்சூரு போன்: 585

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான

நகை; வைர வியாபாரி

**நவநாகரீக நகைகளுக்கு**

சிறந்த இடம்





தங்கள் மனதிற்குகந்த பலவித

நவீன நகைகள் கிடைக்குமிடம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்

செய்து கொடுக்கப்படும்

**K. N. M.**

**மீருன் சாஹிப்**

கன்நிதீட்டி யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணுநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 91 யாழ்ப்பாணம்.

### புற்று நோய்
(Cancer)

பல்லாண்டுகளாக செயல் மூலம் நிருபிக்கப்பட்ட ஆயுள் வேத அரிய மருந்து "யோகீஸ்வர ரசம்" புற்றுநோயை வேரறுக்கும்.

பூரண சுகமடைந்த ஒரு வரது சான்றிதழ்.

எனது மூத்த சகோதரி கெற்பப்பையில் புற்று நோய் பீடிக்கப்பட்டு, கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் 20 காந்த ஊசிகளும் ஏற்றப்படுத்தியதன் மேலும் சுகங்கிடையாமையினல் யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆயுள்வேத வைத்தியர் திரு. பொ. செல்லையாவின் யோகீஸ்வர ரசம் என்னும் அவுசதம் இருபது நாட்களுக்குச் சாப்பிட்டுப் பூரண சுகம் அடைந்தார்.

—க. பொன்னுத்துரை
அரசாங்க உத்தியோகத்தர்

விபரங்கட்கு
பொ. செல்லையா
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 75 கந்தர்மடம்.

### பழைய மாணவர் சங்கம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 14-ந் திகதி முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நிகழும். அத்தருணம் பரிபாலன சபைக்கு ஆறு அங்கத்தவர் நியமனம் பெறுவர். தயவுசெய்து சமுகந்தருக.

சோ. பாலசிங்கம்,
காரியதரிசி.

மானிப்பாய்,
6-4-61.
Advt 96

### பெற்ருர் ஆசிரியர் வருடாந்தக் கூட்டம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரி பெற்ருர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 14-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில நிகழும். அத்தருணம் பரிபாலன சபைக்கு ஆறு அங்கத்தவர் நியமனம் பெறுவர். தயவுசெய்து சமுகந் தருக.

ஞா. அன்னப்பா,
காரியதரிசி.

மானிப்பாய்,
6-4-61.
Advt 97


## பிரதமருக்கு கார் அன்பளிப்பு

கொழும்பு' வியாழன் வருகிற 9ந்தேதி நுவரேலியா பழைய மார்க்கெட்டில் கூட்டுறவு கிளை டிப்போ ஒன்றை பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா திறந்துவைப்பார். அப்போது அவருக்கு ...தல ஏஜெண்டுகள் டொயாடோ மோட்டார் கம்பெனியின் கார் ஒன்றைப் பரிசளிப்பார்கள்.

# கட்டளை வரும் போது மலைநாட்டு தமிழரும் தியாகம் செய்வர்

—திரு. கே. ஜி. எஸ். நாயர்

எட்டியாந்தோட்டை, ஏப்ரல்6

"மொழி மனிதனின் மூச்சு, அதையாரும் விட்டுவிட முடியாது. சிங்களமக்கள் தங்களின் மொழியை எப்படி விரும்புகிருர்களோ, பெருமைப்படுத்த வேண்டுமென நினைக்கிருர்களோ அப்படியே தமிழ் மக்களும் எண்ணுகின்றனர். இதை யாரும் தவறென்று கூறிவிட முடியாது. இந்த பிரச்சினையை உரிமைப்பிரச்சினையாகமதித்து தீர்க்க முயலவேண்டுமேயல்லாது, வகுப்பு வாதப்பிரச்சினையாக மதித்து வெற்றியைத் தூண்ட எத்தனிக்கக் கூடாது. எதற்கெடுத்தாலும் திரு. கே. எம். பி. இராஜரத்தின போன்றவர்களின் குறைந்தர ஜாதிய பிரசாரத்தை ஒரு சாக்காக வைத்து இந்நாட்டின் மூன்றில் ஒரு பகுதியினருக்கு அவர்களின் உரிமைகள் கொடுக்க மறுக்கப்பட்டு வருகிறது.

மேலும், மலைநாட்டுத் தொழிலாளர்களையும் அதன் ஸ்தாபனத்தையுமிட்டு வட, கிழக்கு மாகாணங்களில் தியாகம் செய்கின்ற தலைவர்களும் பொதுமக்களும் சந்தேகம் கொள்வதைப்போல் தெரிய வருகிறது. எங்கள் ஸ்தாபனம் கட்டளையிடும்போது எவ்வித தியாகமும் செய்யத்தயாராக இருக்கிருர்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேம்"

இவ்வாறு எட்டியாந் தோட்டையைச்சேர்ந்த அம்பாமலைத்தோட்டத்தில் தொழிலாளர் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. கே. ஜி. எஸ். நாயர் குறிப்பிட்டார். திருவாளர்கள் ஏ. பாலகிருஷ்ணன், பியதாஸ் பீரிஸ், டி. எம். பீர்முகம்மது, பி. எஸ் வி. நாயுடு ஆகியோர்களும் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

## ஆசிரியர் - ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சை

### சித்திபெற்ருேர் விபரம்

1960 ம் ஆண்டு ஜூன்மாதம் நடைபெற்ற ஆசிரியர் - ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:

இப்பெறுபேறு உத்தியோகபூர்வமான தராதரப் பத்திரம் வழங்கியபின் தான் உறுதியுடையதாகும்.

**தமிழ்மொழி மூலப் பரீட்சை ஸ்தானம் யாழ்ப்பாணம்**

க. அன்னபூரணம், செ. அப்புத்துரை, த. கந்தவனம், பொ. முததுக்குமாரு, ம. இராஜரத்தினம், சு. இராசையா, வே. சதாசிவம், இ. செல்லையா, இ. செல்வராசா, ம. சின்னையா, சி. சின்னராசா; க. சுப்பிரமணியம் செ. தம்பையயா, இ. திருநாவுக்கரசு, சு. வேலும்பிள்ளை.

**பரீட்சை ஸ்தானம் அனுராதபுரம்**

மு. மு. மு. இப்ருகிம், ப. முருகேசு, நா. பெரியதம்பி, சி. தெட்சணுமூர்த்தி,

**பரீட்சை ஸ்தானம் கண்டி**

வே. ப. க. கனகசபை

**பரீட்சை ஸ்தானம் கொழும்பு**

க. இராசமாணிக்கம் பிரி- பெரியகல்லாறு, கல்லாறு. க. வேல்முருக "இராஜேஸ்வரி விலாஸ்", வாழைச்சேனை. எஸ். ஈ. ஆர். பேரின்பநாயகம் பரீட்சாதிகாரி.

## மே. ஜேர்மனியில் நிதிமந்திரி

கொழும்பு, வியாழன் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கு ஜெர்மனி வந்த இலங்கை நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, அந்நாட்டுடன் இலங்கைக்கு 4 கோடி மார்க் பொருளாதார உதவி பெறுவது பற்றிய பேச்சுவார்த்தை நடத்திவருகிருர். இன்று அவர் மேற்கு ஜெர்மனுக்கு விஜயம் செய்வார்.

## "சட்டத்தால் அடக்க முடியாது"

சாவகச்சேரி, ஏப் 6

ஒரு ஜனநாயக நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்க பெரும்பான்மையினர் முயல்வது நாட்டில் பகைமையைவளர்க்கவழிவகுப்பதாகும். இரு சமூகமும் ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் நாடு சுகமடையும். சட்டத்தால் உரிமைப் போராட்டத்தை அடக்க முடியது. இதை அரசாங்கம் உணரவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி நகரசுத்தித் தொழிலாளர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வதற்காகக் கூடியபொழுது சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் கூறினர்.

## அரசாங்க இலாகாக்களில் சிங்கள மொழி உபயோகம் மேற்பார்வையிட அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்

கொழும்பு, வியாழன்

அரசாங்க அதிகாரிகளால் உத்தியோக மொழியான சிங்களம் எவ்விதம் உபயோகிக்கப்படுகிறதென்பதை மேற்பார்வையிட ஒரு அதிகாரியை நியமிக்கும்படி சகல இலாகாத் தலைவர்களுக்கும் பிரதமர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிருர்.

இந்த அதிகாரி, குறித்த இலாகாவில் உத்தியோக மொழிச் சட்டம் எவ்வாறு அமுல் நடத்தப்படுகிறது என்பதை இலாகா தலைவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

பிரதமரின் சுற்றறிக்கையைத் தொடர்ந்து, உத்தியோக மொழி விவகார தற்காலிக விசேஷ கமிஷனர் டாக்டர் நந்ததேவா, இந்த மாறுதலுக்குத் தேவையான முழுப் பொறுப்பையும் இலாகா அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறியிருக்கிருர். 3 மாதங்களுக்கொரு முறை அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அவர் கூறியிருக்கிருர்.

## மின்னல்தாக்கி ஒருவர் மரணம்

வவுனியா, புதன்

பாவற்குள குடியேற்றத்தின் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த ஆறு பேர் மின்னலால் தாக்குண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரத்தைச் சேர்ந்த 50 வயது மாரிமுத்து என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானுர். வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள் குணமடைந்து வருகின்றனர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்; காலை 7, பகல் 12. 45, மாலை 6, இரவு 9)

**வெள்ளி 7-4-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 7-45 யோகராணி, சின்னத்துரை—பக்திப்பாடல்கள் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 என். ஆர். கோவிந்தசாமி — நாகஸ்வரம் 6-15 கிராமசஞ்சிகை 6-45 வயலின் 7-00 ஞான அஞ்சலி 7-30 விமர்சனம் 7-45 ஆகாசவாணி அஞ்சல் 8-45 இஸ்லாமிய கீதங்கள் 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 நேயர்விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-30 திருவாரூர் எஸ். பாலகிருஷ்ணம்—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 மாதர் நிகழ்ச்சி 2-30 இசைக் கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஜி. என். பாலசுப்ரமணியம்—பாட்டு 9-15 பலகனி உலக சுகாதாரதினம்—சித்திரம் 9-30 புதுமலர் மெல்லிசைப் பாடல்கள் 9-45 இசைமாலை.


## அறிவித்தல்

'ஈழநாடு' தினசரி மலைநாட்டுப் பதிப்பு, கண்டி, மாத்தளை, ஹட்டன், நுவரெலியா, பதுளை முதலிய பகுதியிலுள்ள ஈழநாடு ஏஜண்டுகள் ஈழநாடு விற்பனை சம்பந்தமான சகல விபரங்களுக்கும் கீழ்க்கண்ட எமது பிரதம ஏஜண்டுக்கு எழுதவும்

ஜெகஜோதி அன் கோ,
14, திருக்கோணமலை வீதி,
கண்டி.

## ஏஜண்டுகள் தேவை

'ஈழநாடு' தினசரி மலைநாட்டுப் பதிப்புக்கு கீழ்க்கண்ட பகுதிகளில் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

தலவாக்கொல்லை — நோர்வுட்
அக்கரப்பத்தனை — பொகவந்தலாவ
டயகாமம் — ரம்படை
நானுஓயா — நோர்ட்டன்பிரிட்ஜ்

விபரங்களுக்கு:

ஜெகஜோதி அன் கோ.
14, திருக்கோணமலை வீதி,
கண்டி. Advt. 94

## மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM — TRADE MARK 1950

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிலுடன்
மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No 18255 — A. M. BUHARI, 255 5th CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

Advt. 4

# தமிழில் வாக்குமூலம் எழுத வசதியில்லை!

## சத்தியாக்கிரகச் செய்திகள்

முருங்கன் கிராமச் சங்கத்தை யடுத்த பதினைு வட்டாரங் களிலுமிருந்து தமிழ் பேசும் இனம் திரள் திரளாகத் திரண்டு தம் அறுவடையையும் வேலைகளையும் பொருட்படுத் தாது ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண், பெண் யாவரும் இன்று மன்னர் கச்சேரியில் சமூகங் கொடுத்து மறியலியக்கத்திற் பங்குபற்றினர். கிராமச் சங் கத்து உதவித் தலைவர் ஜனுப் செய்யது அகமத்தும் பங்குபற் றினர்.

∴ ∴ ∴

முன்னூற்றுக்கு மேற்பட்ட ஆண்களைக் கொண்ட ஏர்முனை ஊர்வலமொன்று திரு.அ.நசரே த்து லம்பேர்ட், திரு. செ. அந் தோனிக்கூஞ்ஞ தலைமையில் நடந்தது.

∴ ∴ ∴

இலந்தோட்டை மக்களில் பல்வேறு இனத்தவர்கள் சத் தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

∴ ∴ ∴

நானட்டான் மேற்கு, சூரிய கட்டைக்காடு ஏழாம் வட்டார அங்கத்தவர் திரு. அ. க. திருச் செல்வம் தலைமையில் வந்த ஆண்கள் மாதர்கள் யாவரும் கோஷ்டியாக வந்து மறியல் செய்தனர்.

∴ ∴ ∴

இலுப்பக்கடவையிலிருந்து லொறிக் கணக்காக வந்த மக் கள் திரு. ஏ. செபஸ்தியாம் பிள்ளை தலைமையில்ஊர்வலமாக வந்து சத்தியாக்கிரகத்திற் கல ந்துகொண்டனர்.

∴ ∴ ∴

வண்ணகுளம் 12-ம் கட்டை திரு. கே. ஜீவரட்டினம்நாடார் தலைமையில் இருநூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் மறி யல் இயக்கத்திற் புகுந்தனர்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பொன்னுத்துரை வரத ராசா என்பவர் மன்னரில் பகலுமிரவுமாக 16 நாட் சத்தி யாக்கிரகம் செய்து கொண்டி ருக்கிருர்.

∴ ∴ ∴

சிங்களப் பிரமுகர்களும் வர்த்தகர்களும் மன்னர் சத்தி யாக்கிரகிகளுக்குக் காலை உண வைக் கொடுப்பதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

∴ ∴ ∴

பனங்கட்டிக்கொட்டுவைச் சேர்ந்த 85 வயது நிரம்பிய திரு. சுவக்கீன் அத்தினயகம் பிள்ளை 16 நாட் சத்தியாக்கிர கத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிருர்.

∴ ∴ ∴

### வங்காலை ஊர்வலம்

ஜீ. ஏ. வாஸ், எம். ஏ. சோசை, அன்ரனி வாஸ் முத லியோர் தலைமையில் பிரமண் டமான ஓர் ஊர்வலமும் திரு மதி சூசையப்புக்கு ரூஸ்தலை வையில் வந்த நீண்டதொரு மாதர் சங்க அணிவகுப்பும், திருக்கன்னியர் மட மாணவி களும் கொண்ட மூவாயிரத் துக்கதிகமானேர் பக்திப் பர வசத்துடன் அணியணியாக முன்வந்து திரு. வி. ஏ. அழ கக்கோன் எம். பி.பிடம் ஒரு பண முடிப்பை வழங்கினர்.

## வங்கி ஊழியரின் ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியாழன் இலங்கை வங்கி, மேர்கண் டைல் வங்கி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்கள் "வாழ்க் கைத்தரம் உயருகின்றதனல் நாமும் சம்பள உயர்வு கோரு கிறேம்." "சோஷலிசம் நிலவும் நாட்டில் தொழிற்சங்க ஊழி யர்களுக்கும் உயர்வு வேண் டும்" என்ற சுலோக அட்டை களைத் தாங்கிய வண்ணம் நேற்று அமைதியான முறை யில் யாழ்ப்பாணத்தின் பிர தான வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

அகில இலங்கை வங்கி ஊழியர் தாய்ச்சங்கம் ஆரம் பத்தில் ஊர்வலங்கள் எதுவும் செய்யவேண்டாமென அறிவித் திருந்த முடிவை இப்பொழுது மாற்றி அமைதியான முறை யில் ஊர்வலங்களை நடத்தலா மென இங்கு அறிவித்ததைத் தொடர்ந்தே மேற்படி ஊர் வலம் நடைபெற்றது.

மேற்படி ஊழியர்கள் நேற்று மூன்ருவது நாளாக வேலை நிறுத்தஞ் செய்தனர் தாய்ச் சங்கததிலிருந்து கிடைத்த இறுதிச் செய்தியின்படி சமர சத்துக்கான சாத்தியக் கூறு கள் எதுவும் தென்படவில்லை என்பதாக மேற்படி சங்கங் களின் முக்கிய ஊழியர் ஒருவர் நமதுநிருபரிடம் தெரிவித்தார்.

## புகார் செய்யச்சென்றவருக்கு யாழ்ப்பாணப் பொலிசாரின் பதில்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்டாணம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்வதற் குச் சென்றவர் அங்கு தமிழில் தனது குற்றச்சாட்டைப் பதிவு செய்ய வசதியில்லையென்று கூறப்பட்டிருப்பதால் புகார் செய்யாமலே திரும்ப வேண்டி ஏற்பட்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் பீச் ரோட்டி லுள்ள மராமத்திலாகா காரி யாலயத்தின் முன் மறியல் செய்துகொண்டிருந்தவர்களை "உத்தியோக உடையணியாமலிருந்த சில பொலிஸ்காரர் கல்வீசித்தாக்கியதாக" மறியல் செய்தவர்களுள் ஒருவர் தெரி வித்ததைத்தொடர்ந்து மாநகர சபை அங்கத்தவர் திரு. பீற் றர் எஸ். சோமசுந்தரமும் புரக் டர் எஸ். வி. மகாதேவாவும் பொலிஸில் புகார் செய்வதற் காக அவரை அழைத்துச்சென் றனர்.

ஆறுமுகம் என்னும் பெயரை யுடைய அவர் தனது புகார் தமிழிலேயே பதிவுசெய்யப்பட வேண்டுமென்றும் தனக்குவேறு மொழி தெரியாதென்றும் கூறி ஞர்.

பொலிஸ் நிலையத்தில் அச்சம யம் கடமை யாற்றிக்கொண்டி ருந்தவர்கள் தங்களுக்குத்தமிழ் தெரியாதென்றும் குற்றச்சாட் டை ஆங்கிலத்தில் பதிவுசெய் யலாமென்றும் தெரிவித்தார் கள்.

தமிழில்தான் பதிவுசெய்யப் படவேண்டுமென்று திரு. ஆறு முகம் வற்புறுத்தியதனல் பிர தம இன்ஸ்பெக்டரிடம் கேட் டுப் பார்ப்பதாக ஒரு பொலிஸ் காரர் தெரிவித்தார். தமிழில் பதிவுசெய்வதற்கு தற்சமயம் வசதியில்லை யென்று பிரதம இன்ஸ்பெக்டரும் கூறினர். தமிழில் பதிவு செய்யவில்லை யானல் தான் 'புகார்செய்ய விரும்பவில்லையென்று கூறி விட்டு திரு.ஆறுமுகமும் திரும் பினர்.

## வழக்கறிஞர்களுக்கு தமிழ் சிங்கள வகுப்புகள்

### மே மாதம் முதல் ஆரம்பம்

கொழும்பு, வியாழன் மேமாதம் முதல் வழக்கறி ஞர்களுக்குச் சிங்களத்திலும், தமிழிலும் வகுப்புகள் நடத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. சிங்கள வகுப்புக்களில் சேர அநேக தமிழர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக வழக்கறி ஞர் சங்கக் காரியதரிசி திரு. ஆஸ்டின்கூரே கூறினர். போது மான சிங்கள போதகர்கள் எவரும் தங்கள் சேவையை அளிக்கமுன்வரவில்லை என்றும் அவர் கூறினர்.


ரசிகர்களை மகிழ்விக்க
திரும்பவும் காட்சியளிக்கிறது
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங் கள். அதனல் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.

ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.

........எனவே

பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருகதேனும் திகட் டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.........

ஆனல் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்......

ஏன்?

எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?

பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......

புதுமை விரும்பிகள்

எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி,
பி. எஸ். கோவிந்தன்
ஈ. வி. சரோஜா
மாதுரிதேவி, வி. சுசீலா
நடித்த



அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரக்ஷன்: CH.நாராயணமூர்த்தி & M.K.R.நம்பியார்
கதை.வசனம்: வில்லன்: T.S.நடராஜன் ஸ்டுடியோ-நியூடோன்
அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவன்யூ, மதருஸ்.4

இப்பொழுது திரையிடப்படுகிறது!
மனோகரா (யாழ்ப்பாணம்)
பதிபக்தி
சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன்,
சாவித்திரி, தங்கவேலு நடித்தது.
மாலை 6-30 இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30 மெற்னி

# கொழும்பில் பேச்சுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தித்து முதல் நாள் பேச்சு வார்த்தைகள் பற்றித் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து நீதி அமைச்சின் அதிகாரிகள் திரு. செல்வநாயகத்தைச் சந்தித்துப் பேசினர்.

முதல்நாள் பேச்சுவார்த்தை அவ்வளவு திருப்தியளிக்கவில்லையென்றும் இதனுலேயே திரு. இராசமாணிக்கமும் திரு. அமிர்தலிங்கமும் உடனடியாக தங்கள் இடங்களுக்குத் திரும்பிவிட்டனரென்றும் தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு சிறிதாவது இணங்கும் நோக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கத் தரப்பினரும் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லையென்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்களின் மனேநிலையை 'நாடி' பிடித்துப் பார்க்கும் நோக்கத்துடனேயே இச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிகிறதென்றும் தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் கருதப்படுகிறது.

## கைவிட முடியாது

முதல் நாள் சந்திப்பின் போது குறைந்தபட்சக் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கினுலொழிய சத்தியாக்கிரகம் கைவிடப்படவோ, நிறுத்தப்படவோ மாட்டாது என்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டதாகவும் அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கவேண்டுமென்பது தான் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளில் முக்கியமானதென்றும் இந்தக் கோரிக்கையின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களின் அலுவல்களும் தமிழில் நடைபெற வேண்டுமென்பதுமாகும்.

திரு. கே. ராஜலிங்கம் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் திரு. செல்வநாயகத்தை சந்தித்துப் பேசினர்.

---

## இந்திய வம்சாவளியினர்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காலம் முடிவடைந்த பின்னும் அங்கு தங்கும் இலங்கையரல்லாதவரோ பங்கீட்டரிசிப் புத்தகம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு மனுவும் பரிசீலனை செய்யப் படுகிறது. இதற்கு அவகாசம் பிடிக்கும்.

இலங்கையின் மனுக்களுடனேயே இலங்கையரல்லாதாரின் மனுக்கள் மீதும் முடிவு செய்யப்படுகிறது. எனவே இது சகஜமாக நடக்கும் விஷயமே. இதற்கு விசேஷ உள்ளர்த்தம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## வவனியா இயக்கத்துக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கப்படும் நடவடிக்கைகள் பற்றி உடனுக்குடன் திரு. செல்வநாயகத்துடன் தொடர்புகொள்வதாக திரு. சிவசிதம்பரம் கூறியதாகவும் தெரிகிறது.

## தற்காலிக தொழில் மந்திரி

கொழும்பு, வியாழன்

தொழில் அமைச்சின் பார்லிமெண்டரிக்காரியதரிசி சிறிவர்தன, தற்காலிக தொழில்மந்திரியாக நியமிக்கப்பட்டார். தொழில்மந்திரி திரு. சரத் விஜயசிங்கா சுகவீனமுற்றிருப்பதுதான் இதற்குக் காரணம்.

---

## தற்காலிக வீடமைப்பு மந்திரி

உதவி வீடமைப்பு மந்திரி திரு. பாஸ்குவல் தற்காலிக வீடமைப்பு மந்திரியாக நேற்று நியமிக்கப்பட்டார். வீடமைப்பு மந்திரி திரு.மகாநாமசமரவீரா வெளிநாடு சென்றிருப்பது தான் இதற்குக்காரணம்.

---

## வவனியாவில் பூரண ஹர்த்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் இன்றைய மறியலில் கலந்து கொண்டனர். வர்த்தகர்கள் ஊர்வலமாக கச்சேரியை வந்தடைந்த போது வவனியா எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் அவர்களைவரவேற்ருர். வர்த்தகர்கள் சார்பில் திரு. வி. எஸ். கந்தையாவும், ஜனுப் எம். எம். லெப்பையும் எம். பி. யிடம் பண முடிப் பொன்றை வழங்கினர்.

வவனியாப் பகுதியிலுள்ள 13 கிராமச் சங்கங்களின் தலைவர்களும் அங்கத்தவர்களும் ஊர்வலமாகக் கச்சேரிக்கு வந்து சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர். இவர்கள் ஒருநாள் உண்ணவிரதமும் அனுஷ்டித்தனர்.

முல்லைத்தீவு, ஓமந்தை ஆகிய இடங்களிலிருந்துசுமார்200பேர் சைக்கிளில் ஊர்வலமாக கச்சேரிக்கு வந்து மறியலில் கலந்து கொண்டனர்.

## மகாவலிகங்கை திட்ட அறிக்கை

கொழும்பு, வியாழன்

ஐ. நா. அதிகாரி ஜெமிஸ் வைல்டும், நீர்ப்பாசன பகுதி அதிபர் குணசேகராவும், விவசாய,நீர்ப்பாசன மந்திரி திரு. சி.பி. டி. சில்வாவிடம மகாவலி கங்கை பலநோக்குத் திட்ட ஆராய்ச்சி அறிக்கையை நேற்று கையளித்தனர்.

---

## யாழ்ப்பாணத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். பி. திரு. எம். பாலசுந்தரம் தலைமையில் இன்று 47வது தினமாக மறியல் நடைபெறுகிறது.

நேற்றுமாலை கோப்பாய்த் தொகுதித் தொண்டர்கள் மறியலை ஆரம்பித்தார்கள். கோப்பாய் தெற்கு தமிழுரிமைப் போராட்ட சத்தியாக்கிரகக் குழுவின் தலைமையில் பெண்களும் மாணவர்களும் உட்பட பெருந்தொகையான தொண்டர்கள் கோப்பாய் கற்பகப் பிள்ளையார் கோயிலிலிருந்து ஊர்வலமாக வந்து மறியலில் கலந்து கொண்டனர். கோப்பாய்த் தொகுதியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தொண்டர்கள் மறியலில் கலந்து கொள்வதற்காக நேற்று மாலையிலேயே வந்து சேர்ந்தார்கள்.

இன்று கோப்பாய்த் தொகுதியின் பலபாகங்களிலிருந்தும் பக்திசிரத்தையோடு அமைதியான ஊர்வலங்களாக வந்து தொண்டர்கள் மறியலில் கலந்து கொள்வார்கள்.

இன்று மாலை ஊர்காவற்துறைத் தொண்டர்களால் திரு. வி. ஏ. கந்தையா எம். பி. தலைமையில் மறியல் ஆரம்பமாகி நாளை மாலைவரை நடைபெறும்.

## செனட்டில் ஆயுள்வேத மசோதா நிறைவேறியது

கொழும்பு, வியாழன்

நேற்று செனட் சபையில் ஆயுள்வேத மசோதா மூன்ருவது தடவையாக வாசிக்கப்பட்டு வாக்கெடுப்பு எதுவும் இன்றி நிறைவேறியது.

---

## தமிழுக்காக கூட்டுப்பிரார்த்தனை

ஏழாலை, வெள்ளி

தமிழ் உரிமைப் போராட்டம் வெற்றிபெறவேண்டும் என்றும் அரசாங்கத்திற்குநல்லெண்ணம் ஏற்பட்டுதமிழர்பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்றும் கோரி ஏழாலை ஸ்ரீ அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் விசேஷ பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் இன்று நடைபெறும்.

கூட்டுப் பிரார்த்தனையை சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்தமும், சைவப்பிரசாரகர் திரு. த.திருநாவுக்கரசவும் நடத்திவைப்பார்கள்.

---

## கடிதத்தொடர்புகளை தமிழில் நடத்துக

சங்கானை, வெள்ளி

வட,கீழ்மாகாணங்களிலுள்ள உள்ளுராட்சி மன்றங்களுடன் நடத்தும் கடிதப்போக்கு வரத்தை தமிழில் வைத்துக்கொள்ளும்படி, ஸ்தலஸ்தாபனக் கமிஷனருக்கு சங்கானை பட்டின சபைத் தலைவர் கடிதமூலம் கேட்டிருக்கிருர்.

தற்பொழுது தமக்கு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்துவரும் கடிதம் யாவும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் சிங்களப் பிரதிகளாகவே வருகின்றன என்றும் இனிமேல் தமிழில் இவைகளை அனுப்பும்படியும் கடிதத்தில் பட்டினசபைத் தலைவர் கேட்டிருக்கின்ருர்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமேந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்
கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
116, 118, கொய்சர் வீதி,
கொழும்பு.



ஹான்ட்லூம்ஸ்
ஸ்தாபனத்தின்
7வது ஆண்டுவிழா
சித்திரை மாதம் 3ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை

எங்கள் கொண்டாட்டத்தை வாடிக்கைக்காரர்களுடன் பங்கு பற்று முகமாக, குறிப்பிட்ட நாட்களுக்குள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் சிறந்த விதகழிவு கொடுக்க முன்வந்துள்ளோம்.

அநேக அதி உன்னத ரகங்களிலுள்ள சேலைகள், உடுப்பு ஜவுளிகள், திரைச்சீலைகள், கம்பளங்கள், படுக்கை விரிப்புகள், ஷேர்ட்டிங் துணிகள், சாரங்கள் ஆகியனவற்றில், விரும்பியதை, தேர்ந்தெடுங்கள்.

குறிப்பு: வாடிக்கைக்காரரின் வசதியை முன்னிட்டு இவ்ஸ்தாபனம் ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும்.

ஹான்ட்லூம்ஸ்
(இந்திய அரசாங்கம்)
7, செட்டித் தெரு, கொழும்பு.
கிளை. "அன்னை மாளிகை" பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.